விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 174 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 28 சனிக்கிழமை (11.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

www.edus.lk
EDUS
Learning made lovable
இலங்கையின் No.1 கல்வி நிறுவனத்துடன் இணைந்திடுங்கள்...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Everyone
0777 123 330 (11705)

## இலங்கைக்கு கடன் வழங்குவது சாத்தியமில்லை

சர்வதேச நாணய நிதியம்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## அதிக விலைக்கு அரிசி விற்றால் உடனடியாக கைது

யாழ். அரச அதிபர் எச்சரிக்கை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழரை புறந்தள்ளியதால் படுகுழியில் நாடு வீழ்ந்துள்ளது



சம்பிக்க தெரிவிப்பு

( 7 ஆம் பக்கம் பார்க்க )

### மன்னாரில் குடும்பஸ்தர்களான

## இரு சகோதரர்கள் துரத்தித் துரத்தி பட்டப் பகலில் வெட்டிப் படுகொலை

(மன்னார்)

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் குடும்பஸ்தர்களான இரு சகோதரர்கள் பட்டப் பகலில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களது மற்றுமொரு சகோதரன், 15



## லிட்ரோ தலைவர் பதவி விலகினார்

(கொழும்பு)

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக விஜித ஹேரத். அறிவித்துள்ளார்.

எரிவாயுவினை சீரான முறையில் பொது மக்களுக்கு வழங்க 15

### போக்குவரத்து, மின் பிரச்சினையையடுத்து

## எதிர்வரும் திங்கட்கிழமை அரசாங்க விடுமுறை

### பாடசாலைகளும் இயங்காது

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை 13ஆம் திகதி விசேட அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்சினைகள், மின்சார துண்டிப்பு உள்ளிட்ட விடயங் 15

### முல்லை குருந்தூர் மலையில்

## புத்தரின் சிலை நாளை பிரதிஷ்டை



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைபற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள 15

### இலங்கையின் பொருளாதார நெருக்கடி

# பாரிய மனிதாபிமான நெருக்கடியாக மாறலாம்

## ஐ.நா. அபாய எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிதித் தட்டுப்பாடு காரணமாக முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் மனிதாபிமான நெருக்கடி உருவாகலாம் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

### நெல்லியடி மத்திய கல்லூரியில்

## குளவி கொட்டியதில் 10 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய கல்லூரியில் குளவி கொட்டியதில் 8 மாணவர்கள் மற்றும் 2 ஆசிரியர்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை மைதானத்தில் நேற்று 15

## பல்கலை மாணவர்கள் கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

கொழும்பில் கல்வி அமைச்சிற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து இந்த ஆர்ப் 15

## யாழில் டெங்கு நோயால் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

காக்கைதீவு ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இந்திரராசா ஜெகதீசன் (வயது- 49) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவருக்கு நடுக்கத்துடன் காய்ச்சல் ஏற்பட்ட 15

### இருபாலையில் வீடொன்றில்

## புதையல் தோண்ட முயன்ற 7 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இருபாலையில் வீடொன்றில் தங் 15

### வவுனியாவில்

## கிணற்றிலிருந்து 30 வயது பெண்ணின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் கிணற்றிலிருந்து 30 15

## பொன்னாலை பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதல்

### இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொன்னாலை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட வாள் வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாய 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உடன் விற்பனைக்குண்டு

பலாலி வீதி
செல்வமஹால்
திருமண மண்டபத்திற்கு
அருகில் உள்ள 6
பரப்புக் காணி
பிரிக்கப்பட்ட நிலையில்
விற்பனைக்குண்டு.




தொடர்புகளுக்கு:-
077 229 4985
076 178 7326 (11828)

## சமையலறை ஆதங்கப் போராட்டம்

(கொழும்பு)

நாட்டில்நிலவும்பொருளாதார நெருக்கடி நிலைக்கு மக்கள் கடும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்நிலையில் இன்றைய தினம் கொகுவெல சந்தியில் மாலை 6 மணிக்கு அரசாங்கத்திற்கு எதிராக சமையலறை ஆதங்கப்போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே சமையலறை ஆதங்கங்களை முழு உலகும் கேட்கட்டும். ஒலியெழுப்பக்கூடிய சமையல் உபகரணங்களோடு இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கொகுவெல சந்திக்கு அருகில் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-7)

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கு நியூ லங்கா பாம் அருகில் 4 பரப்பு. இரண்டு பரப்பாகவும் பிரித்து வழங்கப்படும். விலை நேரில் பேசலாம்.

தொடர்பு (11829)
077 529 5487
077 538 4132

## வேலை வாய்ப்பு

▫ பயிற்சி பெற்ற தாதியர்
(கணனி அறிவு, ஆங்கில மருந்து தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு (11835)
077 873 0129

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு மேசன், கூலியாள், பெயின்ரர் மற்றும் ஜிப்சம் வேலை செய்யக்கூடியவர்கள் தேவை. (C-4477)

தொடர்புகளுக்கு:-
076 760 0403
077 592 5371

## கார்/வான் வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள்/வான்கள் சாரதி அல்லாமல் நீண்டகால குத்தகைக்கு தேவை. (11836)

077 839 5849

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1992.10.31
இறப்பு 2021.05.23



### திருமதி தர்சியா
(முகாமைத்துவ உதவியாளர், யாழ்.வலயம்)

வீட்டின் முதல் விளக்காய் வந்தவளே!
எமைவிட்டு முதலாயே போனதேனோ!
உன் பாதம் படாத முற்றமும்
உன் குரல்கள் கேட்காத சுவர்களும்
தர்சி தர்சி என்று அம்மாவும் அப்பாவும்
அம்மா அம்மா என்று பிள்ளைகளும்
அக்கா அக்கா என்று தம்பியும் தங்கையும்
உன்னோடு பேசாத, உன் முகம் காணாத
இந்த ஓராண்டு அழிக்க முடியாத உன் நினைவுகளை
அழிக்க முடியாத துயரமாய் தொடர்ந்து
கொண்டே இருக்கும்.
ஓம் சாந்தி!

கண்ணீரோடு
அம்மா, அப்பா, தம்பி, தங்கை, பிள்ளைகள் (11823)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### பாலசுப்பிரமணியம் நிபோஷன்

தோற்றம் 21 - 09 - 1998
மறைவு 12 - 05 - 2022

வாழ்வில் எமதினிய
வசந்தம் அழிந்துவிட்ட
காலக்கொடுமையதின்
காரணத்தை நாமறியோம்
என்றுமே உன் நாமம்
எமதுயிரை நெஞ்சிருத்தி
கண்ணீர் மலர்களினால்
காணிக்கை செய்கின்றோம்
ஓம் சாந்தி!

கூவில், கீரிமலை. (11820) தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### செபமாலை யேசுதாசன்



தோற்றம்:- 30.03.1956
மறைவு:- 08.06.2022

கூழாவடி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் ஜேர்மனை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை யேசுதாசன் அவர்கள் கடந்த 08.06.2022 (புதன்கிழமை) காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை-ஆரோக்கியத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-லூர்தம்மாவின் அன்புமிகு மருமகனும் மேரி ஜொய்சியின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும் சேசிலம்பேட் (பிரான்ஸ்), சாலிலுபின்பேட் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரி மலர், ஞானமலர், மரியமலர், மேரி திரேசா, அன்னமேரி (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வமலர் மற்றும் மரியதாஸ் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்), சூசைதாஸ், ஜெயசந்தானமேரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தர்சினி (பிரான்ஸ்), ராதிகா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தோமஸ் பூபாலு, சூசைப்பிள்ளை, அன்ரனி, பெனடிற், அன்ரன் லோகநாதன் (சுவிஸ்), றதி, வண்ணமலர், சந்திரமோகன், யோகநாதன், அமலன், சாமினி, மீனா ஆகியோரின் மைத்துனரும் கிபேஷ், ஜெனோஸ், சொனாலி (பிரன்சிஸ்), ஜெய்டன், அமாயா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கூழாவடியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புனித அன்னாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனை வழிபாடு நடைபெற்று காக்கைதீவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி 4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (11834)

தகவல்: குடும்பத்தினர்
077 620 4578

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று மருந்துகள்

## போதியளவு கையிருப்பு உள்ளது


### அச்சம் தேவையில்லை என்கிறது சுகாதாரப்பிரிவு

**(கொழும்பு)**

**நாட்டில் அத்தியாவசிய மருந்து வகைகளின் கையிருப்பு குறைவாக காணப்படுகின்ற போதிலும், அவற்றுக்கான மாற்று மருந்துகளின் கையிருப்பு போதியளவு உள்ளது.**

எனவே அது குறித்து பொது மக்கள் வீணாக அச்சமடையவோ குழப்பமடையவோ தேவையில்லை என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மருத்துவரின் ஆலோசனைகளைப் பெறாமல் அத்தியாவசிய மருந்துகளை மருந்தகங்களில் கொள்வனவு செய்வதை தவிர்க்குமாறும், . கொழும்புக்கு வெளியே உள்ளவர்கள் கொழும்புக்கு வருவதை தவிர்த்து தத்தமது பிரதேசங்களுக்கு அண்மையில் உள்ள மருத்துவமனைகளுக்கு செல்லும் படியும் சுகாதாரப் பிரிவு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.



இதேவேளை அரச மருத்துவமனைகளில் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற காரணத்தினால் மருந்தகங்களில் கூடிய காலத்திற்கு மருந்துகளை கொள்வனவு செய்வதை தவிர்த்துக்கொள்வது நல்லது.

மருந்துகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு சரியான வெப்பநிலை தேவை என்பதுடன், எதிர்காலத்தில் உங்களுக்கான மருந்துகள் மாறவும் கூடும். ஆகவே, மருந்துகளை அளவுக்கதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

மேலும், நோயாளர்கள் தங்களது மாதாந்த சிகிச்சைகளுக்கு வருவதை நிறுத்தாமல், தவறாது வருகை தரும்படியும், மருத்துவர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக மருந்துகளை பெற்றுக் கொள்ளும் படியும் விசேட மருத்துவ நிபுணர் உப்புல் திஸாநாயக்க பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

சிறுவர்களுக்கான திரவ மருந்துகள் (சிரப்) தட்டுப்பாடு காணப்படுகிறது. சிறுவர்களது நோய்களைக் குணப்படுத்தும் மருந்து வில்லைகளை தூளாக்கி அவர்களுக்கு பருகக் கொடுக்கலாம். சிறுவர்களுக்கான மருந்து தொடர்பில் பெற்றோர்கள் அச்சமடையத் தேவையில்லை என அவர் தெரிவித்தார். (நி-6)

## கடவுச்சீட்டு புகைப்படங்களை அனுப்பும் மென்பொருள் செயலிழந்தது

(கொழும்பு)

கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பிடிக்கப்படும் படங்களை, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு இணையத்தள முறைமையில் அனுப்புவதற்கான மென்பொருள் முழுமையாக செயலிழந்துள்ளது.

படப்பிடிப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ரணில் ரூபசிங்க இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

எனவே, வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் அனைவரும், படங்களை பிடிப்பதற்கு, பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு செல்லுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## பவித்ரா வன்னியாராச்சி, தம்மிக்க பெரேரா ஆகியோருக்கு அமைச்சுப் பதவி?

(கொழும்பு)

இரண்டு புதிய அமைச்சு பதவிகளும் அவற்றுக்கான விடயப்பரப்புகளும் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த அமைச்சுகளுக்கு புதிதாக இரு அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அதற்கமைய, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சராக பவித்ரா வன்னியாரச்சி நியமிக்கப்படவுள்ளதாகவும் தம்மிக்க பெரேரா, தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சராக நியமிக்கபடவுள்ளார் என்றும் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

## கடன் விண்ணப்பங்களை நிராகரிக்கும் வங்கிகள்

### மத்திய வங்கியின் ஆய்வில் தகவல்

(கொழும்பு)

மக்களின் வருமானத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வாடிக்கையாளர்களால் தங்கள் கடன்களை மீள செலுத்த முடியாது என கருதும் வங்கிகள் கடன் விண்ணப்பங்களை அதிகளவில் நிராகரிக்கின்றன.

மத்திய வங்கி சமீபத்தில் மேற்கொண்ட கடன் ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் வங்கிகளால் நிராகரிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகம் என்பது இந்த ஆய்வின் போது தெரியவந்துள்ளது. முதல் மூன்று மாதங்களில் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பிள்ளைகள் பட்டினியால் வாடுவதை சகிக்க முடியாமல் தாய் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

தனது பிள்ளைகள் மூன்று நாட்களாகப் பட்டினியில் வாடுவதைக் கண்டு அதனைச் சகித்துக்கொள்ள முடியாத தாய் ஒருவர் தற்கொலைக்கு முயற்சித்த பெருந்துயரச் சம்பவம் வெல்லவாய பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நச்சுத் தன்மையுடைய விதைகளை இடித்து அதனை அருந்தி தற்கொலைக்கு முயற்சித்த அந்தத் தாய் தற்போது பதுளை மருத்துவ மனையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

4, 8 மற்றும் 9 வயதுகளில் இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். தந்தைக்கும் நிரந்தரத் தொழில் இல்லை.

சுமார் 3 நாட்களாக நீரை மட்டுமே அருந்தி இவர்கள் உயிர் வாழ்ந்துள்ளனர்.

இந்நிலையில், பிள்ளைகள் பட்டினியில் தவிப்பதைத் தாங்கிக்கொள்ள முடியாத தாய், தற்கொலை எனும் தவறான முடிவை நாடியுள்ளார். (நி-6)

## 30-40 வரையான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி

(கொழும்பு)

30 தொடக்கம் 40 வரையான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதியும் பிரதமரும் ஆலோசித்துள்ளனர்.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் நால்வருக்கும் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும், அரசில் இணைந்து இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அ.அரவிந்குமார், [illegible] காதர் மஸ்தான் உள்ளிட்டவர்களுக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

21 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிய பிறகு இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதற்கென தற்போது தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், அதற்கு முன்னதாகக்கூட நியமனம் [illegible] என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (நி-6)

## முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை

### சுகாதார அமைச்சின் முடிவுக்கு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையுடன் தாம் உடன்படவில்லை என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண, கொரோனா பேரிடரை ஒழிக்காமல், இது போன்ற தீர்மானங்களை கட்டாயமாக்கக் கூடாது என தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடற்கரை கரப்பந்தாட்ட போட்டி


# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சம்பியன்





வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை உதய சூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலய அணி மோதியது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது. 3ஆம் இடத்தை வல்வை சிதம்பரக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. (4-90)

இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொழும்பு இந்துக் கல்லூரி அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. 11 ஆவது தடவையாக இரு கல்லூரிகளும் மோதும் இந்தப் போட்டி இன்றும் நடைபெறவுள்ளது. (படங்கள்- சிவசாந்தன்)




வடக்கின் நீலங்களின் சமர் துடுப்பாட்டப் போட்டி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (படங்கள்:- சப்தசங்கரி, தேவானந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2636

### பவி

தினமும் ஒருவருக்கு ஏதாவது ஒரு முறையில் உதவுவது என்று தீமானித்துக் கொள்ளுங்கள்... ஒரு சிறு புன்னகை, ஆறுதல் கூட உதவிதான்...!



### கவிதா

நம் வாழ்வில் கண்கள் காட்டிக் கொடுத்த உண்மைகளை விட நம் காதுகள் கேட்ட பொய்களே அதிகம்...



### துர்க்கா



அளவுக்கு அதிகமாக பேசி காயப்பட்ட பின்பு தான்... யாரிடமும் பேச வேண்டாம் என்ற மனநிலையே வருகிறது...!

### சாம்பவி

எல்லோருக்கும் நீ நம்பிக்கைக்கு உரியவனாய் இரு. ஆனால் யாரையும் நம்பிவிடாதே... உயிராக நேசித்த உறவு கூட உன்னை விட்டுப் பிரியலாம்.

### கரன்

பசுவைப் போல் சாந்தமாக இருந்து விட்டுப் போகத்தான் ஆசை... ஆனால் நரிகளுக்கு மத்தியில் தான் வாழ்கிறோம் என்பதை உணரும் போது... கர்ஜனை செய்யாமல் கடந்து செல்ல முடிவதில்லை...!

### டிலோன்

சாவு எப்போது வேண்டுமானாலும் வரலாம் நம் தேசமும், நம் நாடும் நம் கலாசாரமும் எவனும் இழிவாக பேசுறதுக்கு விட்டு கொடுத்திடக் கூடாது.
பொன் முத்துராமலிங்கம்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடனான உடன்படிக்கை உடனடியாக சாத்தியமில்லை

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பில் எப்போது உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்பது குறித்தோ எவ்வளவு கடன் வழங்கப்படும் என்பது குறித்தோ தற்போது தெரிவிக்க முடியாது என சர்வதேச நாணயநிதியம் குறிப்பிட்டுள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் பேச்சாளர் கெரி ரைஸ் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்துள்ளார்.

சாத்தியமான நிதியுதவியின் அளவு குறித்தும் அல்லது பணியாளர் நிலையிலான உடன்படிக்கை எப்போது கைச்சாத்திடப்படும் என்பது குறித்தும் தற்போது தெரிவிக்க முடியாது அதற்கு காலமுள்ளது.

இலங்கை அதிகாரிகள் முன்வைக்கும் - உறுதியளிக்கும் கொள்கை எவ்வளவு வலுவானது என்பதே உடன்படிக்கை எப்போது கைச்சாத்திடப்படும் என்பதைத் தீர்மானிக்கும்.

கடன்பேண் தகைமை மீள ஏற்படுத்தப்படும் என்ற உறுதிமொழி எங்கள் சபைக்கு வழங்கப்படுவது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடரும் நெருக்கடி குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். விசேடமாக மனிதாபிமான நெருக்கடி குறித்து பொதுமக்கள் மீதான தாக்கம் குறித்து கரிசனை கொண்டுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே நாங்கள் அந்த நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கின்றோம். ஒரு திட்டம் குறித்த கொள்கை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக எதிர்வரும் வாரங்களில் இலங்கைக்கு நேரடி விஜயமொன்றை முன்னெடுப்பது குறித்து திட்டமிடுகின்றோம் எனவும் ரைஸ் தெரிவித்துள்ளார்.

மே மாதத்தில் இலங்கை அரசாங்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை மேலும் வலுப்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு முதல் ஆறுவாரங்களில் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை சாத்தியமாகும் என இலங்கை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ள நிலையிலேயே சர்வதேச நாணயநிதியத்தின் இந்த நிலைப்பாடு வெளியாகியுள்ளது. (நி-6)

### இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள முரண்பாடு தொடர்பான விடயங்களை முன்வைத்து குறித்த ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு.

கந்தன் இரத்தினம்



பிறப்பு:- 15.06.1949

இறப்பு:- 22.06.2021

ஆண்டு ஒன்று ஓடி
மறைந்து விட்டது அப்பா
உங்கள் நினைவுகளை எங்களால்
மறந்து வாழ்ந்து விட முடியவில்லை
அன்பின் உருவான உங்களை
எம் வாழ்நாள் முழுவதும்
மனதில் வைத்திருப்போம்

(11826)

உரும்பிராய் தெற்கு (யோகபுரம்)

குடும்பத்தினர்.



பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின்

28ம் ஆண்டு நினைவு தினம்

11.06.2022



பேராசிரியர்.

அழகையா துரைராசா

அர்ப்பணிப்பு, ஆற்றல், மனிதநேயம் போன்ற உயர் பண்புகளினூடாக எமது கல்லூரிக்கு ஆற்றிய மகத்தான சேவையை மனதினில் நிறுத்தி இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

(C-4474) 077 171 0294


# இராசிபலன்

11.06.2022
வைகாசி 28, சனிக்கிழமை
துவாதசி பின்னிரவு 12.19 மணிவ்ரை

சுவாதி முன்னிரவு 11.26 மணிவரை
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - உத்திரட்டாதி, ரேவதி

வளவன்



**மேஷம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



**கடகம்** தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், நம்பிக்கைகள் நடைபெற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீதான அக்கறை கூடும்.



**துலாம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு, குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.



**மகரம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமாக எடுத்த திட்டங்கள் கைகூடும், போசன நன்மையுண்டு, பெண்களால் பெருமை சேரும் நாள்.



**ரிஷபம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியமான நாள்.



**சிம்மம்** உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், நினைத்த காரியங்களை நிறைவேற்றும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



**விருச்சிகம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரியங்களில் வெற்றி பெற கடவுளை வழிபட வேண்டிய நாள், தொலைபேசித்தகவல் மகிழ்ச்சி தரும்.



**கும்பம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப பெரியோரின் ஆதரவை பெறுவீர்கள், போசன சுகமுண்டு.



**மிதுனம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ரோக பயமுண்டு, வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.



**கன்னி** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.



**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அதிர்ஷ்டகரமான நாள்.



**மீனம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

இன்றைய நாளைத் தனதென அமைப்பவனே இன்ப மனிதன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்றால் சட்டம் பாயும்

## யாழ்.அரச அதிபர் எச்சரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் அரசினால் நிர்ண்யிக்கப்பட்டுள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையினை மீறி அரிசி விற்பனை செய்வோருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் பொருட்களுக்கான விலை அதிகரித்துள்ள நிலை காணப்படுகின்றது.

பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் வியாபாரிகள் அத்தியாவசியப் பொருட்களை மிகவும் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். அதே நேரத்தில் தற்போது அரசாங்கம் அரிசிக்குரிய கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயித்துள்ளது.

அந்த நிர்ணய விலைக்கு உட்பட்ட வகையில் பொருட்களினை விற்க வேண்டும் சில்லறை விற்பனையாளர்களும் இந்த விடயத்தில் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

எதிர்காலங்களில் யாழில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஊடாக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

கட்டுப்பாட்டு விலையினை மீறி அரிசி விற்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளோம் என மேலும் தெரிவித்தார். (4-6-33-104)

## வற்றாப்பளை ஆலயத்திற்கான பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் நடைபெறவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு அன்றைய தினம் காரை நகரிலிருந்து காலை 5 மணிக்கு 782 பாதையில் மானிப்பாய், மருதனார்மடம் கோப்பாய் ஊடாக ஒரு பேருந்து சேவையும் மாலை 4 மணிக்கு 782 பாதையூடாக யாழ்ப்பாணம் சென்று ஒரு பேருந்து சேவையும் இடம்பெறவுள்ளது.

எனவே வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலுக்குச் செல்லும் அடியார்கள் காரைநகர் சாலையில் ஆசன முற்பதிவுகளை செய்ய முடியும் என சாலை முகாமையாளர் ந.குணசீலன் அறிவித்துள்ளார். (4-6)

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக வட .மாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 ஐ சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் 22.06.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும், வகை-ii பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவையில் தரம் -ii ஐ உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அதிபர் தரம் - ii ஐ சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் இலங்கை அதிபர் சேவையில் தரம் -iii ஐ சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படும் என தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (4-6)

## நவநீதமணியின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கோட்டக் கல்வி பணிப்பாளர் மா.நவநீதமணியின் மணிவிழா நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை சூரிய மஹால் திருமண மண்டபத்தில் ஓய்வு நிலை வடமாகாண கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

## இருபாலை கந்தசாமி ஆலய அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, அருள்மிகு கந்தசாமி (முனிகோவில்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம், நாளைமறுதினம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 22.ஆம் திகதி நிறைவடையும் அன்றைய தினம் மாலை முருகப் பெருமானுக்கு திருக்கல்யாணம் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (4-6)

## தென்மராட்சியில் 300 பேருக்கு லாப் எரிவாயு விநியோகம்



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் லாப் எரிவாயு பதிவினை மேற்கொண்ட 300 பேருக்கு நேற்று வெள்ளிக்கிழமை சாவ கச்சேரி லாப் எரிவாயு விநியோக இடத்தில் வைத்து எரிவாயு வழங்கப்பட்டது.

முதற்கட்டமாக பதிவினை மேற்கொண்ட 300 பேருக்கே இவ்வாறு எரிவாயு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் எடை கொண்ட எரிவாயு நிரப்பிய சிலிண்டர் ஒன்று 7 ஆயிரத்து நூறு ரூபாவுக்கு வழங்கி வைக்கப்பட்டது. தென்மராட்சி பிரதேசத்திற்கு இம்முறை 418 லாப் எரிவாயு சிலிண்டர்களே ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4-6-30)

## எதிர்காலத்தில் பட்டினிச் சாவை தடுக்க சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை

(சாவகச்சேரி)

எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படப்போகும் பஞ்சம், பட்டினி ஆகியவற்றைப் போக்கும் முகமாக சாவகச்சேரி பிரதேசசபை பத்து இலட்சம் மரவள்ளித் துண்டங்கள் மற்றும் வற்றாளங்கிழங்கு கொடிகளை மக்களுக்கு வழங்கி வைக்க 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்படப் போகின்ற பஞ்சம், பசி, பட்டினி ஆகியவற்றை போக்கும் முகமாக விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்த சாவகச்சேரிப் பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக 50 இலட்சம் ரூபாவினை ஒதுக்கீடு செய்து விவசாயிகள், [illegible]கள் மத்தியில் 10 இலட்சம் மரவள்ளித் துண்டங்கள் மற்றும் வற்றாளங்கொடி ஆகியவற்றை வழங்கி பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க தீர்மானித்துள்ளோம்.

மாகாண ஆளுநரின் அனுமதியைப் பெற்று குறித்த திட்டத்தை விரைவாக நடைமுறைப் படுத்த எண்ணியுள்ளோம்.

ஏனைய நிறுவனங்கள் சிறுதானியங்கள், மரக்கறிச் செய்கைகளை ஊக்குவித்து வருகின்றன. அதனால் நாம் செய்கைக்கு இலகுவான மரவள்ளி, வற்றாளம் ஆகிய பயிர்களை ஊக்குவித்து பட்டினியில் இருந்து மக்களை [illegible] [illegible] தெரிவித்தார். (4-6-30)

## 'ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுப்போம்'

### யாழில் இன்று பேரணி

(யாழ்ப்பாணம்)

மாற்றுப்பாலின சமூகத்தினரை ஒடுக்குமுறைகளுக்குட்படுத்தாத வாழ்தலை நோக்கி 'ஒடுக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம்' எனும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் வானவில் நடைபயண ஒருங்கிணைவு பேரணியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். திருநர் வலையமைப்பின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பேருந்து நிலையம் முன்பாக தொடங்கும் பேரணி சத்திர சந்தியை சென்றடைந்து ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கார்கில்ஸ் கட்டட தொகுதியை வந்தடையும்.

சமத்துவம், சுயமரியாதை மற்றும் சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும், இந்தப் பேரணியில் எம்முடன் கைகோர்த்து நடக்க வருமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (4-6-18-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை புறந்தள்ளியதால் நாடு படுகுழியில் வீழ்ந்துள்ளது



(கொழும்பு)

**"மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், தமிழ் மக்களைப் புறந்தள்ளி ஆட்சி நடத்தியமையால்தான் நாடு இன்று முன்னேறாமல் படுகுழியில் வீழ்ந்துள்ளது. இதைத் தற்போதைய அரசு கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்" என ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீன உறுப்பினராகச் செயற்படும் கொழும்பு மாவட்ட எம்.பி.சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

பாராளுமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு நான் ஆதரவு வழங்கமாட்டேன். அதேவேளை, இந்த அரசை வீழ்த்தும் சதி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கவும் மாட்டேன்.

பாராளுமன்றில் நான் தொடர்ந்தும் சுயாதீன உறுப்பினராகவே இருப்பேன். ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகளில் அதிருப்தி இருந்தமையால்தான் நான் அதிலிருந்து விலகி சுயாதீன உறுப்பினராகச் செயற்படுகின்றேன்.

மக்களின் நன்மை கருதி அரசு முன்னெடுக்கும் செயற்றிட்டங்களுக்கு மாத்திரம் வெளியில் இருந்து ஆதரவு வழங்குவேன்.

எனது எதிர்கால இலக்கு தொடர்பில் இப்போது நான் சொல்லமாட்டேன். தமிழ் மக்களையும் அரவணைத்துக் கொண்டே நான் பயணிப்பேன். மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், தமிழ் மக்களைப் புறந்தள்ளி ஆட்சி நடத்தியமையால்தான் நாடு இன்று முன்னேறாமல் படுகுழியில் வீழ்ந்துள்ளது. இதைத் தற்போதைய அரசு கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# ராஜபக்ஷக்களுக்கு கரும்புள்ளியாகிய '9'

## சமூக வலைத்தளங்களில் வைரலாகும் பதிவுகள்

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்துக்குப் பொருந்தாத நாளாக 9 ஆம் திகதி மாறியுள்ளது என சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன.

குறிப்பாக '9' ஆம் திகதி ராஜபக்ஷக்களுக்கு வலி தந்த நாளாகவும், மறக்க முடியாத நாளாகவும் அமைந்துள்ளது எனப் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

மே -9 ஆம் திகதி, பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷ விலகினார். மகிந்தவின் 52 வருட கால அரசியலில் அந்நாள் அவருக்குப் பெரும் கறுப்புப் புள்ளியாக இது அமைந்தது.

ஜூன் 9 ஆம் திகதி பசில் ராஜபக்ஷ, தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார். 21 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறினால் ஆபத்து என்பதை அறிந்த அவர், முன்கூட்டியே விடைபெற்றார்.

எனவே, ஜூலை 9 ஆம் திகதி என்ன நடக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவாரா? என சமூக வலைத்தளங்களில் கேள்விகள் எழுப் பப்பட்டு வருகின்றன. (நி-6)


குருவே துணை

வாழ்க வையகம்  வாழ்க வளமுடன்

**"வேதாத்திரி மகரிஷியின்" மனவளக்கலை யோகப் பயிற்சிகள்**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் 'வேதாத்திரி மகரிஷி அருளிய மனவளக்கலை யோகப்பயிற்சிகள்' இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 11.06.2022 சனிக்கிழமை தொடக்கம்
17.06.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

அறிமுகவுரை:- மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன், துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4476)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>கி.பா: 8½ சூரி 2 செவ் 3<br>உயரம்:170 cm<br>தகைமை/தொழில்:O/L சுவிஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு :PR உள்ள வெளிநாட்டுப் பெண்<br>தொ.இ: B/10082 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 52 சூரி 10 செவ் 7<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:A/L விஞ்ஞானப்பிரிவு ஆங்கில அறிவு உள்ளவர்.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன் விரும்பத்தக்கது)<br>தொ.இ:G/10366 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா:38½ சூரி 6 செவ் 7<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: கணனி விரிவுரையாளர் லண்டன் இன்தரியூட் மனேஜ்மென்ட்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/10085 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 3<br>கி.பா: சூரி 3 செவ் 4 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:Mechanical Engineering (Master) Uk Project Manager - London<br>எதிர்பார்ப்பு:படித்த வரன்<br>தொ.இ: G/10383 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் : கார்த்திகை 4<br>கி.பா:16 சூரி 1 செவ் 6 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்:O/L அரச திணைக்கள சாரதி<br>எதிர்பார்ப்பு : அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/10095 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: சூரி.செவ் 12 இல்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்:Doctor USA<br>எதிர்பார்ப்பு: Doctor<br>தொ.இ:G/10384 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம் : பூரட்டாதி 4<br>கி.பா:26¾ சூரி 8 செவ் 5 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/10096 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை 3<br>கி.பா: சூரி.செவ் 11<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:BBM அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ:G/10390 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 68

# நேர்மைக்கு கிடைத்த பரிசு



ஒரு மிகப் பெரிய நிறுவனத்தின் முதலாளிக்கு வயதாகி விட்டதால், அவர் தன் நிறுவனத்தின் பொறுப்பை அவரிடம் வேலை செய்யும் ஒரு நேர்மையானவரிடம் ஒப்படைக்க முடிவு செய்தார். எல்லா ஊழியர்களையும் தன் அறைக்கு வருமாறு கட்டளை இட்டார். அனைவரும் ஆர்வத்துடன் வந்திருந்தனர். முதலாளி பேச ஆரம்பித்தார்: அன்புள்ள ஊழியர்களே, என்னுடைய ஓய்வுக்குப் பின் உங்களில் ஒருவர் தான் என்னுடைய இந்த நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும். அதனால் உங்களுக்கு நான் ஒரு போட்டி வைக்கப் போகிறேன். அதில் யார் வெற்றியடைகின்றாரோ அவர் தான் நம் நிறுவனத்தின் அடுத்த மேலாளர் என்றார்.

இப்போது என் கையில் பலதரப்பட்ட பல வகைகளை சார்ந்த ஏராளமான விதைகள் இருக்கின்றன. யாருக்கு எந்த விதை வரும் என எனக்கே தெரியாது. இதை உங்களிடம் ஆளுக்கு ஒன்றாக கொடுப்பேன்.

இதை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு தொட்டியில் நாட்டி, உரம் இட்டு, தண்ணீர் ஊற்றி, நன்றாக வளர்த்து, அடுத்த வருடம் இதே நாளில், என்னிடம் எடுத்து வந்து காட்ட வேண்டும். யாருடைய செடி நன்றாக, உயரமாக, போஷாக்காக வளர்ந்து இருக்கிறதோ அவரே என் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்றார். அனைவரும் ஆளுக்கு ஒரு விதை வாங்கிச் சென்றனர். அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் ராமகிருஷ்ணனுக்கும் ஒரு விதை கிடைத்தது. அவர் ஆர்வத்துடன் அதை வாங்கிச்சென்றார். தன் மனைவியிடம் போய் முதலாளி சொன்ன அனைத்தையும் அப்படியே சொன்னார். அவன் மனைவி தொட்டியும் உரமும் தண்ணீரும் எடுத்து அவருக்கு கொடுத்து அந்த விதையை நடுவதற்கு உதவி செய்தாள். ஒரு வாரம் கழிந்தது. நிறுவனத்தில் இருக்கும் அனைவரும் தங்கள் தொட்டியில் செடி வளர ஆரம்பித்து விட்டது என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். ஆனால் ராமகிருஷ்ணனின் தொட்டியில் செடி இன்னும் வளரவே ஆரம்பிக்கவில்லை.

ஒரு மாதம் ஆகியும் செடி வளரவே இல்லை, நாட்கள் கடந்தன. ஆறு மாதங்கள் ஆனது. அப்பொழுதும் அவர் தொட்டியில் செடி வளரவே இல்லை. நான் விதையை வீணாக்கி விட்டேனா என்று எண்ண ஆரம்பித்தார். ஆனால் தினந்தோறும் செடிக்கு தண்ணீர் ஊற்றுவதை மட்டும் நிறுத்தவே இல்லை. தன் தொட்டியில் செடி வளரவில்லை என்று அலுவலகத்தில் யாரிடமும் அவர் சொல்லவும் இல்லை. ஒரு வருடம் முடிந்து விட்டது. எல்லாரும் தொட்டிகளை முதலாளியிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தார்கள்.

ராமகிருஷ்ணன் தன் மனைவியிடம்: காலி தொட்டியை நான் எடுத்துப் போக மாட்டேன்; எனக்கு வெட்கமாக இருக்கிறது என்று சொன்னார். அவர் மனைவி அவரை சமாதானப்படுத்தி சொன்னார்: நீங்கள் ஒரு வருடம் முழுக்க உங்கள் முதலாளி சொன்ன மாதிரித் தானே செய்தீர்கள். செடி வளராததற்கு நீங்கள் வருந்த வேண்டியதில்லை. அதற்கு நீங்கள் காரணமும் அல்ல. நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். தொட்டியை எடுத்துச் சென்று முதலாளியிடம் காட்டுங்கள் என்றாள்.

ராமகிருஷ்ணன் காலித் தொட்டியை அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றார். எல்லாரும் தொட்டிகளை அவர் கண் முன்னே கொண்டு சென்றார்கள்.

விதவிதமான செடிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் இருந்தன. பல்வேறு விதமான பூக்கள் அவைகளில் பூத்துக் குலுங்கின. ராமகிருஷ்ணன் தொட்டியை பார்த்த அனைவரும் சிரிக்க ஆரம்பித்தனர்.

முதலாளி எல்லாரையும் தன்னுடைய அறைக்கு வருமாறு அழைத்தார். எல்லாருடைய செடியையும் பார்வை இட்டார். அருமை. எல்லாரும் செம்மையாக செடியை வளர்த்து உள்ளீர்கள். உங்களில் யாரோ ஒருவர் தான் இன்று பொறுப்பு ஏற்றுக் கொள்ளப் போகின்றீர்கள் என்றார். ராமகிருஷ்ணன் கடைசி வரிசையில் நின்றிருந்தார். அவரை அருகே வருமாறு அழைத்தார். முதலாளி தன்னை வேலையை விட்டு நீக்கத்தான் கூப்பிடுகிறார் என்று எண்ணி பயந்து கொண்டே சென்றார் ராமகிருஷ்ணன்.

முதலாளி: ராமகிருஷ்ணன் உங்கள் செடி எங்கே..? என்று கேட்டார்.

ஒரு வருடமாக அந்த விதையை நாட்டி உரமிட்டு தண்ணீர் விட்டதை விலாவாரியாக எடுத்துச் சொன்னார் ராமகிருஷ்ணன். முதலாளி ராமகிருஷ்ணனை தவிர அனைவரையும் உட்காருமாறு கூறினார். பிறகு ராமகிருஷ்ணன் தோளில் கையை போட்டுக் கொண்டு: நமது நிறுவனத்தின் நிர்வாகத்தை ஏற்று நடத்தப் போகிறவர் இவர் தான் என்றார்.ராமகிருஷ்ணனுக்கு ஒரே அதிர்ச்சி. தன் தொட்டியில் செடி வளரவே இல்லையே!

பிறகு ஏன் நமக்கு இந்த பொறுப்பை கொடுக்கிறார்? என்று குழம்பிப் போனார். முதலாளி பேச ஆரம்பித்தார்: சென்ற வருடம் நான் உங்களிடம், ஆளுக்கு ஒரு விதை கொடுத்து வளர்க்க சொன்னேன் அல்லவா? அது அனைத்தும் அவிக்கப்பட்ட விதைகள் [Boiled seeds]. அந்த விதைகள் அவிக்கப்பட்டதால், அது முளைக்க இயலாது. அவை அனைத்துமே முளைக்கும் தன்மையை இழந்துவிட்டன. நீங்கள் அனைவரும் நான் கொடுத்த விதை முளைக்காததால், அதற்கு பதில் வேறு ஒரு விதையை நாட்டி வளர்த்து கொண்டு வந்திருக்கின்றீர்கள்.

ராமகிருஷ்ணன் மட்டுமே நேர்மையாக நடந்து கொண்டார். ஆகவே அவரே என் நிறுவனத்தை நிர்வகிக்க தகுதியானவர் என்றார். நாம் சொல்லும் சொல், நாம் பயணிக்கும் பாதை, நேர்மையாக இருந்தால் மட்டும் போதும், வெற்றிகள் நம்மைத் தேடி ஓடி வரும். வாழ்க்கையில் நேர்மையாக இருக்க முயல்வதும் ஒரு போராட்டம் தான். அதில் வெற்றி பெறுவது தான் உண்மையான வெற்றி. உண்மையும், நேர்மையும், தர்ம த்தை பாதுகாக்கும், நேர்மை ஒரு போதும் வீண் போகாது. நேர்மையை விதையுங்கள். பதவியும் பணமும் தானாக உங்களை தேடி ஓடி வரும்.

புகழ் வர வேண்டாம். ஏனெனில், அந்த புகழுக்கு உரியவன் இறைவன் ஒருவன் மட்டுமே..!



Vivekananthan Vipulananth

# உணவு நெருக்க

# உலக வர்த்

(வோஷிங்டன்)

ரஷ்ய- உக்ரைன் போரினால் தொ
நீடிக்கலாம் என, உலக வர்த்தக

இதுகுறித்து உலக வர்த்தக மையத்தின் தலைமை இயக்குனர் எங்கோசி ஒகொன்ஜோ-இவேலா கூறுகையில்,

'குறிப்பாக, கோதுமை மற்றும் உரங்கள் பற்றாக்குறையால் ஆபிரிக்க நாடுகள் கடுமையாக பாதிக்கப்படலாம்.

லட்சக்கணக்கிலான தொன்கள் அளவுக்கு தானியங்கள் சேமிப்புக் கிடங்குகளில் கிடத்தப்பட்டுள்ளன.

அவை போர் காரணமாக உக்ரைன் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தானியங்களின் விலை உயர்வது உண்மையில் வேதனைக்குரியது.

# 40 பேர்

## வைரச்சுரங்க விப

### கொங்கோவில் துயரம்



(கொங்கோ)

ஆபிரிக்க நாடான கொங்கோவில் வைரச்சுரங்கம் சரிந்து விழுந்த விபத்தில் சிக்கி, 40 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

## அந்தாட்டிக்கா பனிப் பொழிவிலும்

# மைக்ரோ பிளாஸ்டிக்

புவியின் தென் துருவத்திலுள்ள அந்தாட்டிக்காவில் புதிய பனிப்பொழிவில் மைக்ரோ பிளாஸ்டிக் துகள்கள் இருப்பது க்ண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீன்களின் வயிறு, மனிதனின் உடலில் மைக்ரோ பிளாஸ்டிக் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வரிசையில் இப்போது பனிப் பொழிவில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்தாட்டிக்காவில் மனிதர்களால் ஏற்படும் சுற்றுச் சூழல் விளைவுகள் குறித்து அவ்வப்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


பனிப்பொழிவில் மைக்ரோ பிளாஸ்டிக் துகள்கள் தென்படுவதை நியூசிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அந்தாட்டிக்காவில் உள்ள 19 இடங்களில் இருந்து மாதிரிகளை சேகரித்து பரிசோதித்ததில் ஒவ்வொன்றிலும் சிறிய பிளாஸ்டிக் துகள்கள் இருந்துள்ளன. ஒரு லீற்றர் பனியில், சராசரியாக 29 மைக்ரோ பிளாஸ்டிக் துகள்கள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடி பல ஆண்டுகளுக்கு நீடிக்கலாம்
# த்தக மையம் எச்சரிக்கை

தொடங்கிய உணவு நெருக்கடி பல ஆண்டுகளுக்கு
க மையம் எச்சரித்துள்ளது.



கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோதுமை விலை 59 சதவீதம் உயர்ந்துள்ளது.

சூரியகாந்தி எண்ணெய் விலை 30 சதவீதம், சோளத்தின் விலை 23 சதவீதம் உயர்ந்துள்ளது. உலகளவில் கோதுமையை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக உக்ரைன் உள்ளது.

உலக சந்தையில் உக்ரைனின் கோதுமை ஏற்றுமதி 9 சதவீதமாக உள்ளது. மேலும் அந்நாட்டின் சூரியகாந்தி எண்ணெய் ஏற்றுமதி 42 சதவீதம் என்ற அளவிலும் சோளம் ஏற்றுமதி 16 சதவீதம் என்ற அளவிலும் இருக்கிறது.

தானிய விலைகள் உலக அளவில் உயர்ந்து வரும் நிலையில், கருங்கடல் துறைமுகங்களில் ரஷ்ய தடையாலும், கடற்கரையில் ரஷ்ய, உக்ரைனிய கண்ணிவெடிகளாலும் உக்ரைனில் 20 முதல் 25 மில்லியன் தொன் கோதுமையை வெளியே அனுப்ப முடியாத நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில், ஒடேசா மற்றும் மற்ற உக்ரைனிய துறைமுகங்களிலிருந்து வெளியேறும் டேங்கர்களுக்காக, துருக்கிய கடற்படை துணையுடன் தானிய வழித்தடத்தை அமைப்பதற்கான முயற்சிகளை ஐ.நா. மேற்கொண்டு வருகிறது. (நி-6)

## விபத்தில் பலி

கின்ஷசா நகரில் செயற்பட்டு வரும் வைரச்சுரங்கத்தில், தொழிலாளர்கள் வைரத்தை வெட்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, எதிர்பாராத விதமாக சுரங்கத்தின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது. இடிபாடுகளில் சிக்கிக் கொண்ட தொழிலாளர்களை மீட்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டன.

40 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில், 6 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. மற்றவர்களின் உடல்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (நி-6)

## குரங்கு அம்மை இதுவரை இனங்காணப்படாத நாடுகளில் பரவுகிறது
# உலக சுகாதார ஸ்தாபனம் கவலை

(ஜெனிவா)

குரங்கு அம்மை நோய் தொற்றுகள் அதிகரித்து வரும் நிலையில், பரவலை கட்டுப்படுத்த அனைத்து தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் அடையாளம் காணுமாறு பாதிக்கப்பட்ட நாடுகளை உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ரெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் டுவிட்டர் பதிவில், 1000 இற்கு மேற்பட்ட பாதிப்புகள், இந்நோய் பரவல் இதுவரை இனங்காணப்படாத 29 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளன. இந்த நாடுகளில் இதுவரை உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்தவும் மேலும் பரவுவதைத் தடுக்கவும் அனைத்து தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் அடையாளம் காண பாதிக்கப்பட்ட நாடுகளை உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுக்கொள்கிறது என தெரிவித்துள்ளார்.

நோய் பரவுவதைத் தடுப்பது குறித்து மேலும் வலியுறுத்திய அவர், இதுவரை




எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்றும், ஆனால், குரங்கு அம்மை நோய் பரவல் இனங்காணப்படாத நாடுகளில் பரவுவது உண்மையானது என்றும் தெரிவித்துள்ளார்.

குரங்கு அம்மை நோயிற்கு மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை கையிருப்பில் குறைவாகவே உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

## சீனாவில் மழை, வெள்ளம்
# 17 பேர் பலி

(பீஜிங்)

மத்திய சீன மாகாணமான ஹுனானில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்கி சுமார் 17 பேர் உயிரிழந்தனர்.

நான்கு பேர் காணாமல் போயுள்ளனர்.

சீனா வழக்கமாக கோடை மாதங்களில் வெள்ளப்பெருக்கை அனுபவிக்கிறது. பெரும்பாலும் மத்திய மற்றும் தெற்கு பகுதிகளில் அதிக மழை இந்தப் பகுதிகளில் பெய்வது வாடிக்கையாக உள்ளது.

சீனாவில் கடந்த 1998 இல் ஏற்பட்ட மிக மோசமான வெள்ள பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் 2,000 க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். கிட்டத்தட்ட 3 மில்லியன் வீடுகள் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அமெரிக்காவில் அதிகரிக்கும் வெப்பம்
### மக்கள் அவதி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தென் மேற்கு பிராந்தியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் அதிகரித்த வெப்பம் காணப்படுவதாகவும், வெப்பநிலை மேலும் அதிகரித்துக் கொண்டு செல்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி வெப்பமானது தற்போதைய அசாதாரண காலநிலை மாற்றங்களின் அடிப்படையில் நிகழ்வதாகவும் இதனால் மக்களை மிகவும் அவதானமாக இருக்கும்படி அமெரிக்க அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

சிறுபிள்ளைகள் மற்றும் செல்லப் பிராணிகளை தனியாகவோ அல்லது வாகனங்களுக்குள்ளேயோ தனித்து விட்டுச் செல்ல வேண்டாம் எனவும், அதிகளவு நீர் பானங்களை அருந்துமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட

# சமுர்த்தி பயனாளிகள் பட்டியலை மீளாய்விற்கு உட்படுத்துங்கள்

## அரச அதிபர் மகேசனிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் பட்டியலை உடனடியாக மீளாய்விற்கு உட்படுத்தி அதிக வறுமைக்கோட்டிற்குள், காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள குடும்பங்களை சமுர்த்திப் பயனாளிகளாக உள்ளீர்க்குமாறு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ந.பொன்ராசா யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பான கோரிக்கை கடிதத்தை நேற்று வெள்ளிக் கிழமை யாழ். அரச அதிபருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

தமது வாகனங்களுக்கான எரிபொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வீடுகளில் பதுக்கி வைத்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகளாக உள்ள நிலையில், ஒரு இறாத்தல் பாண் வாங்க முடியாத ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சமுர்த்திப் பயனாளிகாக உள்வாங்கப்படாமல் உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் சமுர்த்தி பெறும் குடும்பங்களில் 70 வீதமானவர்கள் உயர் வருமானம் பெறும் தகுதியற்ற குடும்பங்கள் என மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் பொது வெளியில் குறிப்பிட்டுள்ள கருத்தையும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, யாழ். மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். மாவட்டத்திற்கு என பொதுவான கொள்கையின்படி அரசியல் தலையீடுகள் ஏதுமின்றி சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு இடம்பெற வேண்டும்.

வீடுகளில் உழைக்கும் வயதுடைய நபர்கள், வீடுகளில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை, தொழில்களின் நிலைமை, குடும்ப வருமானம், குடும்பத் தலைவர் அல்லது குடும்ப அங்கத்தவர்களின் நோய் நிலைமை,விதவைகள், கைவிடப்பட்டோர், அங்கவீனர்கள், போர்ப்பாதிப்பிற்கு உட்பட்டவர்கள் போன்ற யாழ்.மாவட்டத்திற்கு என பொதுவான கொள்கையை வகுத்து, அதன்படி யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் கூறியதைப் போன்று தகுதியற்ற 70 வீதமான குடும்பங்களையும் நீக்கி வறுமையில் வாடுகின்ற குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றுங்கள். மிக விரைவாக இத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மைடையவர் என மேலும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்தார். (4-6-33)

## சங்கிலி அறுக்க முற்பட்ட இருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி மகாத்மா வீதியில் வைத்து பெண் ஒருவரின் சங்கிலியை அறுக்க முற்பட்ட இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் மேற்படி வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட கரவெட்டி மேற்கைச் சேர்ந்த ஒருவரும், பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவருமாக இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-6-60)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை 12 ஆம் திகதி 10 மணியளவில் பாடசாலையில் நடை பெறவுள்ளது.

எனவே சகல பழைய மாணவர்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபரால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் நிகழ்கால மற்றும் கடந்தகால ஆசிரியர்களும் பழைய மாணவர் சங்க உறுப்பி னராகலாம் என்பதால் அவர்க ளையும் அக்கூட்டத்தில் சுகா தார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4-6)

## தவறவிடப்பட்ட தொலைபேசி உரியவரிடம் ஒப்படைப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் தனது 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசியினை புலம்பெயர் நாடு ஒன்றிலிருந்து வருகை தந்தவர் தவறவிட்டுள்ள நிலையில் அதனை கண்டெடுத்த கிளிநொச்சி புதுமுறிப்பு இளைஞன் தொலைபேசி உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளார்.

குறித்த இளைஞனின் செயலை பலரும் பாராட்டியுள்ளனர். புலம்பெயர் நாடு ஒன்றிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஒருவர் கிளிநொச்சியில் உள்ள கிராம பாடசாலை ஒன்றுக்கும், முள்ளம் தண்டுவடம் பாதிக்கப்பட்ட நபர் ஒருவருக்கும் உதவி செய்யும் பொருட்டு கிளிநொச்சிக்கு விஜயம் செய்து பாடசாலையினையும் முள்ளம்தண்டுவடம் பாதிக்கப்பட்ட வரை நேரடியாக பார்வையிட்டு திரும்பிக்கொண்டிருந்த போது அவரது 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசியினை வீதியில் கடந்த 8 ஆம் திகதி தவறவிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த தொலைபேசியினை நேற்று முன்தினம் கண்டெடுத்த கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் அதனை உரிமையாளரிடம் கையளித்துள்ளார். (4-6-316)




இலங்கை தேசிய மட்ட கிரிக்கெட் அணிக்கு தெரிவாகியுள்ள கிளிநொச்சி மாணவி சதாசிவம் கலையரசிக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினரால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்- சுபேசன்)

## மானிப்பாயில் வீடுடைத்து நகை, பணம் திருட்டு

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கில் 8 பவுண் நகை மற்றும் 2 இலட்சம் ரூபாய் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், அந்த வீட்டில் இருந்தவர்கள் அயலில் புதிதாக வீடு கட்டி அங்கு குடியேறியுள்ளனர். இந் நிலையில் நேற்று முன்தினம் அங்கு வந்த திருடர்கள் வீட்டின் கதவினை உடைத்து மேற்குறிப்பிட்டவற்றை திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

## விசுவமடுவில் விபத்து இளைஞன் ஒருவர் படுகாயம்

(தருமபுரம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை பரந்தன் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியினை முந்திச் செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த உழவியிந்திரத்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் விசுவமடு புன்னை நீராவி பகுதியைச் சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் இவ் விபத்து தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-316)

## நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவ கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் 2022 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெறக் கூடியவாறு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பிலான முன்னாயத்தக் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அதனடிப்படையில் திருவிழாவுக்கு தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகள், படகு, தரை போக்குவரத்து சுகாதார நடைமுறைகள், உணவு, குடிநீர், மின்சார விநியோகம் மற்றும் வீதி திருத்தம் போன்ற மிக அத்தியாவசியமான தேவைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.


தற்போதைய நெருக்கடி நிலையில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்தோடு கடல் பயணம் மற்றும் தரை பயணங்களின் போது சிறுவர்கள் மற்றும் வயது குறைந்தவர்கள், முதியவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் தாங்களாகவே முன்னெடுக்க வேண்டும் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (4-6-33-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த வருடம் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது மே மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளதாக ஹோட்டல் சேவையாளர்கள் நிலையம் தெரிவித்துள்ளது.**



இதன்படி, கடந்த ஜனவரி மாதம் 82 ஆயிரத்து 322 ஆகக் காணப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த மாதம் 30 ஆயிரத்து 207 ஆகக் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறைகளில் 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# பொதுப் போக்குவரத்தை இலகுபடுத்துமாறு ஜனாதிபதி கோட்டா வலியுறுத்து



(கொழும்பு)

பொதுப் போக்குவரத்து சேவைகளை வினைத் திறன் மற்றும் தரம் வாய்ந்ததாக பேண வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் விலை உயர்வால் மக்கள் அவதிப்படுகின்றனர். அதேவேளை, பொதுப் போக்குவரத்திற்கு அதிக தேவை காணப்படுவதாகவும், அதனை இலகுபடுத்துவதன் மூலம் மக்கள் நிம்மதியடைவர்கள் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (நி)

## இலங்கையர்களுக்கு

# வேலைவாய்ப்பு வழங்க சிங்கப்பூர் இணக்கம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கை பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க சிங்கப்பூர் அரசாங்கம் இணங்கியுள்ளது.

இதன்படி, சுகாதாரத் துறையில் அதிகளவில் வேலைவாய்ப்புக்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர், நிதி அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்.

சிங்கப்பூருக்கான ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும், இலங்கை பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் சந்தர்ப்பங்களை உருவாக்குமாறும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-6)

# டீசல் பெற்றுத் தருமாறு கோரி புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்



(புத்தளம்)

புத்தளம் - எலுவாங்குளம் பகுதியில் விவசாயத்தில் ஈடுபடும் மக்கள் டீசலைப் பெற்றுத் தருமாறு கோரி நேற்று எலுவாங்குளம் பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எலுவாங்குளம் பகுதியில் சுமார் 660 ஏக்கரில் ஒவ்வொரு வருடமும் விவசாயம் செய்து வருவதாகவும், இம்முறை ஏற்பட்ட உரம் தட்டுப்பாடு மற்றும் டீசல் இல்லாமையின் காரணமாக 300 ஏக்கர் நிலப்பரப்பிற்கே விவசாயத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். சிறுபோக விவசாயம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உழவு இயந்திரங்களுக்கு டீசல் இல்லாமையினால் விவசாயத்தை மேற்கொள்வுதற்கு மிகவும் சிரமத்திற்குள்ளாகி வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இரண்டு நாட்களுக்குள் டீசலைப் பெற்றுத்தரா விட்டால் வண்ணாத்திவில்லு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு தொடர் போராட்டத்தில் ஈடுபடபோவதாக அப்பகுதி விவசாய மக்கள் தெரிவித்தனர். (நி-6)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 260 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 600 | 600 |
| தக்காளி | 800 | 700 | 750 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 220 | 140 | 130 |
| கோவா | 380 | 320 | 320 | 400 |
| கரட் | 200 | 350 | 380 | 400 |
| பூசணி | 120 | 170 | 120 | 160 |
| புடோல் | 260 | 200 | 220 | 300 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 480 | 450 | 300-600 | 500 |
| பெரிய வெங்காயம் | 220 | 210 | 200 | 250 |
| பாகற்காய் | 600 | 800 | 650 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 160 | 400 |
| கருணைக் கிழங்கு | 240 | 250 | 150 | 220 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 200 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 380 | 300 | 280 | 400 |
| கறிமிளகாய் | 450 | 500 | 180 | 480 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 800 | 1600 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 100 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 50-80 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 650 | 500 | -- | 600 |
| முள்ளங்கி | 70 | 150 | -- | 300 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | — | 150 | -- | 150 |

## ரஷ்யாவிடம் எரிபொருள் கொள்வனவு

# பேச்சு வார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பு

(கொழும்பு)

நீண்டகால அடிப்படையில் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு இருதரப்பு பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

9 சுயேட்சைக் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

எனவே தங்களது கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விரைவில் சந்தர்ப்பம் வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி தொடர்பில் ஆட்சியாளர்கள் பொறுப்பின்றி செயற்படுவதாகவும் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## சண்டைக்குப் பரிசு!

ஆத்தூரில் ஆதிமூலத்திற்கும் அன்னம்மாளுக்கும் கல்யாணம் நடந்த போது எல்லோரும் "ஆகா! என்ன பொருத்தமான ஜோடி என்று பாராட்டினார்கள். ஆனால் ஒரு வருடத்திற்குள் அந்த பொருத்தமான ஜோடி எலியும் பூனையுமாக ஆகிவிட்டது. ஆதிமூலம் சொல்வதற்கு நேர் எதிராகத் தான் அன்னம் செய்வாள். இருவரும் ஒற்றுமையாக ஒரு கணம் இருந்தது கூட இல்லை. எதிலும் ஏட்டிக்கு போட்டி தான்! அற்ப விடயத்திற்குக் கூட ஒரு சண்டை.

இவர்கள் இப்படி தினமும் சண்டை போடுவதை ஊரார் வெகுவாக ரசித்தார்கள். ஆரம்பத்தில் அந்நியோன்னியமாக இருந்த அவர்கள் ஒரு சில நாட்களிலேயே எதற்கும் வாக்குவாதம் செய்தது கண்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள். ஒரு நாளிரவு தூங்கும் போது பூனைக் குட்டி கத்துவது கேட்டு ஆதிமூலம் "ஏய் அன்னம்! என்ன கும்பகர்ணன் மாதிரி தூங்குகிறாய்? ஒரு பூனைக் குட்டி யன்னல் வழியாக உள்ளே வந்திருக்கிறது. எழுந்து போய் அதை விரட்டு" என்று கூறி தன் மனைவியை எழுப்பினான்.


அன்னமோ "இதற்கு என்னை எழுப்புவானேன்? நீங்களே போய் துரத்தி விட்டு வருவது தானே" என்று கூறிப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். இனி அவளிடம் பேசிப் பயனில்லை என்று எண்ணி ஆதிமூலம் படுக்கையில் இருந்து எழுந்து பூனைக்குட்டியைத் துரத்திக் கொண்டு வாசல் கதவு வரை சென்றான். அவன் வாசல் கதவைத் திறந்து பூனைக்குட்டியை வெளியே துரத்தி விட்டு நிமிர்ந்த போது இரண்டு திருடர்கள் கத்தியைக் காட்டி மிரட்டி அவனை வீட்டிற்குள் தள்ளி தாமும் உள்ளே நுழைந்தவாறே "நாங்கள் யன்னல் வழியாக விட்ட பூனைக் குட்டியைத் துரத்திக் கொண்டு வெளியே வருவாய் என்று எங்களுக்குத் தெரியும்" என்றார்கள். ஆதிமூலம் திகைத்துப் போனான். என்ன செய்வது என யோசிக்கையில் அவர்கள் ஒரு தாம்புக் கயிறை எடுத்து அவனை ஒரு கம்பத்தோடு கட்டினார்கள். அப்போது அவன் "என் ஒருவனைக் கட்ட இதைச் சுற்றி விட்டீர்களே. அந்த அறையில் படுத்திருக்கும் என் மனைவியை எதைக் கொண்டு கட்டிப் போடப் போகிறீர்களாம்?" என்று கேட்டான். அதைக் கேட்ட இரண்டு திருடர்களும் ஆச்சரிப்பட்டார்கள். ஒரு கணவன் தன் மனைவியைக் காட்டிக் கொடுக்கிறான் என்றால் அவர்களுக்குள் ஏட்டிக்குப் போட்டி இருப்பதாகத் தானே பொருள்! அதை நன்கு பயன்படுத்திக் கொள்ள அவர்கள் எண்ணினார்கள். அப்போது கறுப்புத் திருடன் "அவளை கட்ட கயிறு வேண்டாம். என் கண்களை உருட்டி பார்த்தாலே அவள் பயந்து விட மாட்டாளா?" என்றான் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டே. அப்போது வெள்ளைத் திருடன் வாசல் கதவைத் தாளிட்டு வந்தான். பேச்சுக் குரல் கேட்டு அன்னம் மெதுவாக எழுந்தாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்

வீடணன் திருத்த முயன்றான்; திருத்துதல் தீராதாயின் பொறுத்துற வேண்டும்; இவன் கும்பகருணன் அல்லன்; கடமை என்பது எது? என்று முடிவு செய்வதில் வேறுபாடு இருந்தது; "உடன் பிறந்தவனுக்காக உயிர் விடுவது கடமை" என்று கருதினான் கும்பகருணன், உடன் பிறந்த கொள்கைக்காக எதையும் இழப்பது என்பது வீடணன் கொள்கையாய் இருந்தது; முன்னவன் கடமை வீரன்; இவனோ அறச் செல்வன்; "தனிமனிதனுக்காகத் தன்னை இழப்பதை விட உலகப் பொது அறத்திற்காகத் தான் பணி செய்வதே செய்யத்தக்கது" என்ற கொள்கை இவனிடம் நிலவியது. அறம் என்பது ஒன்று; அதோடு



126

அவன் ஞானநெறியில் நம்பிக்கை உள்ளவன்; பிறப்பு என்பது பந்த பாசங்களைக் கொண்டது; இறப்பு என்பது முடிந்த முடிவு அன்று; பிறப்பு இறப்பற்ற பேரின்ப வாழ்வு அடைதலே பிறப்பின் அடிப்படை என்று கருதினான்; சமயக் கோட்பாடுகள் இவனைப் பண்படுத்தி இருந்தன. "இராமனை அடைந்தால் பிறப்புக்கு விடுதலை கிடைக்கும்; பேரின்ப வீடு கிடைக்கும்" என்ற நம்பிக்கையும் இவனுக்கு இருந்தது. இந்த இரண்டு காரணங்களால் இவன் இராவணனை விட்டு விலக முடிவு செய்தான். இவனுக்கு நெருங்கிய நேசமுடைய அமைச்சர்கள் நால்வரோடு [illegible] மாறுதல் தேவை" என்பதை உணர்ந்தான். பாசத்தை விட நேசம் இவனுக்குப் பெரிதாகப்பட்டது. கடலைக் கடந்து கார் வண்ணன் இருக்குமிடம் சேர்ந்தான்; வீடணன் தமிழ் மண்ணில் கால்வைத்தான். அது இலங்கை வாசிக்குப் புகலிடம் தந்தது; 'முன்பின் அறியாத முதல்வனாகிய இராமனை எப்படிச் சந்திப்பது? எப்படி அறிமுகம் செய்து கொள்வது? ஏற்புடைய கருத்துகளை எப்படி எடுத்துச் சொல்வது? பகைக் களத்திலிருந்து வந்தவனுக்குப் புகல் இடம் எப்படிக் கிடைக்கும்? அஞ்சி அஞ்சி அவனை அணுகினான். குரக்கினத் தலைவர் சிலர் வீடணனைக் கண்டனர்; 'அவன் தீய எண்ணத்தோடு தான் வந்திருக்க வேண்டும்' என்று எண்ணினர்; 'அவனை இழுத் துப் பிடித்துக் கழு த்தை நெரித்துக் கொல்வதே 'தக்கது' என்று முடிவு செய்தனர்.

மயிந்தன், துமிந்தன் என்னும் பெயருடைய வானரத் தலைவர் வேறுவிதமாய் நினைத்தனர்; அங்க அழகு இலக்கணங்களை அவர்கள் அறிந்தவராய் விளங்கியதால், 'அவன் அரக்க குணம் அற்றவன்' என்று முடிவு செய்தனர்; அற வாழ்க்கையும் நீதியின் பால் நெஞ்சமும் உடையவன்; ராவணன் வஞ்சகத்தை எதிர்த்து வந்திருக்கிறான்" என இராமனிடம் உரைத்தனர்.

இராமன் அவசரப்பட்டு எதையும் முடிவு செய்ய விரும்பவில்லை; அவன் அரச மகன்; மற்றவரைப் பேச விட்டுத் தன் இருப்பிடத்தை ஓர் ஆலோசனை மண்டபம் ஆக்கினான்; சுறுசுறுப்பாய்ச் சுக்கிரீவன் தன் கருத்தை உரைத்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமங்களுடன் பாடுபட்டு அவற்றை வெல்வது மனித நலன்களில்மிகச் சிறந்தது

– சாமுவேல் ஜான்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெல் கொள்வனவில் சங்கங்கள் ஈடுபட வேண்டும்

தமிழ் மக்களின் நீண்டகால வாழ்வியலோடு இணைந்து பயணித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சேவையை எவரும் மறந்துவிடமுடியாது.

என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்த காலத்தில் பாணுக்கும் அரிசிக்கும் ஏற்பட்ட தட்டுப்பாட்டை சமாளிப்பது தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே ஈறான யுத்த காலம்வரை அத்தியாவசிய பொருட்களைப் பங்கீடு செய்து வழங்குவதில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் பணியாளர்களும் ஆற்றிய சேவையை தமிழ் மண் ஒருபோதும் மறந்துவிடாது.

எனினும் குறித்த சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைகளின் பலயீனங்களும் நேர்மையீனங்களும் தூரநோக்கின்மையும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயங்குநிலையை முடக்கியுள்ளன.

உண்மையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் செயலாற்றுமாக இருந்திருந்தால் 300 ரூபாயுக்கு ஒரு கிலோ அரிசியையும் 2000 ரூபாயுக்கு ஒரு கிலோ செத்தல் மிளகாயையும் விற்பனை செய்கின்ற கொடுஞ்செயல் நடந்திருக்கரது.

என்ன செய்வது காலத்தின் வேகத்தில் சிறப்புச் சந்தைகளும் பல்பொருள் அங்காடிகளும் பெருமளவு மூலதனத்துடன் கவர்ச்சிகரமாக சந்தைக்குள் நுழைய,

வர்ணப்பூச்சை இழந்து பல வருடமாக இருக்கக்கூடிய வாடகைக்கட்டிடத்தில் இயங்கிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் தமது நீண்டகால வாடிக்கையாளர்களைப் பறிகொடுத்து அநாதைகளாயின.

இதனால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது.

இருந்தும் விசுவாசமான – மக்கள் சேவையை மகேசன் சேவையாகப் போற்றுகின்றவர்கள் இருக்கக்கூடிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னமும் இயங்கு நிலையுடன் இருப்பதை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுணர்வோடு பாராட்ட வேண்டும்.

தவிர, இன்றைய சூழலில் அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் மீளுருவாக்கம் செய்து அவற்றை இயங்க வைப்பதன் மூலமே பொருளாதார நெருக்கடியின் ஆபத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்க முடியும்.

அந்தவகையில், தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய நெல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாகக் கொள்வனவு செய்து அவற்றைக் களஞ்சியப்படுத்தி எதிர்காலத்தில் நம்மக்களுக்கு அரிசியை பங்கிட்டு வழங்க வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

இதை நாம் செய்யாவிடில், எங்களின் கைகளில் இருக்கக்கூடிய நெல் எங்களை விட்டு – எங்கள் பிரதேசத்தைவிட்டு வெளியேறிவிடும்.

அதன்பின்பு நாம் எதுவும் செய்ய முடியாதவர்களாகிவிடுவோம்.

எனவே வங்கிகளும் மாவட்ட அரச செயலகங்களும் இயன்றவரை நிதி உதவி வழங்கி, நெற்கொள்வனவில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடுத்த வேண்டும்.

# தீவக கல்வி வலயத்தில் இருந்து ஆசிரியர்கள் வெளியேற முயற்சி

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

தீவக கல்வி வலயத்தில் இருந்து பெருமளவான ஆசிரியர்கள் வெளியேற முயற்சி செய்கின்றனர். இது அபாயகரமானது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தீவுகளில் பணியாற்றும் பல ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம் எனும் பெயரில் சுற்றறிக்கைக்கு முரணாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெறுகின்றன.

இதனால் பல சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக பணியாற்றும் ஆசிரியர்கள் தாம் நீண்டகாலம் தீவகத்தில் கடமையாற்றி விட்டதாகவும் அதனால் தாமும் மற்றவர்களைப்போல நகர்ப்புற பாடசாலைகளுக்கு செல்ல தகுதியுடையவர்களாக இருப்பதாகவும் தங்களையும் விடுவிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு அர்ப்பணிப்போடு கடமையாற்றும் ஆசியர்கள் தீவகத்தில் இருந்து வெளியேறினால் தீவகத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை இன்னும்மோசமடையும்.

இதே போன்று வடக்கின் சில வலயங்களில் நடைமுறைப்படுத்தப்படும் முறையற்ற இடமாற்றங்களால் அதிகஷ்ட, கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இத்தகைய செயற்பாடுகள் பழிவாங்குதல், அரசியல் பின்னணி போன்ற காரணங்களால் முன்னெடுக்கப்படுவதாகவும் செல்வாக்குள்ள சிலர் தாம் நினைத்த இடங்களுக்கு நகர்த்தப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் 20 ஆம் திகதி இலங்கை விஜயம்

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் இம்மாதம் 20 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் பிரதமருக்கும் இடையில் கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இம்மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்டத்தில் உடன்பாடு எட்டப்படும் என நம்புவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.(ம-7)

## மீசாலையில் வீடு உடைத்து 5 பவுண் நகை கொள்ளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை பங்களா வீதிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை வீடொன்றினை உடைத்த கொள்ளையர்கள் வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த 5 பவுண் நகையினை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் வர்த்தக நிலையம் ஒன்றினை நடாத்தி வரும் நிலையில் வீட்டில் ஆட்கள் இல்லாத வேளையில் குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## பாராளுமன்ற உறுப்பினரானார் தம்மிக்க பெரேரா

### வர்த்தமானி வெளியானது

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேராவை நியமித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

தேர்தல்கள் ஆணைக் குழுவினால் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி வர்த்தகரான தம்மிக்க பெரேராவின் பெயர் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கான விண்ணப்பம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமினால் கையளிக்கப்பட்டது.

நாட்டில் வர்த்தக வலையமைப்பு ஒன்றின் தலைவராக செயற்படும் தம்மிக்க பெரேரா, அப்பதவியில் இருந்து விலக உள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 12 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கேள்வர் நாம் குழுமத்தினால் நடத்தப்படும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை கோப்பாய் சரவணபவானந்தா பாடசாலையின் அருகாக அமைந்துள்ள கோப்பாய் மாதர் சங்கக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(4-6-18)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### உடம்பின் அற்புதமான ஆற்றல்




❖ புலன்கள் புறப்பொருட்களின் வடிவத்தைக் கொள்ளாமல் தடுத்து அவற்றை சித்தத்துடன் ஒன்றுபடும்படிச் செய்துவிட்டால் புலன்கள் முழுமையாக அடங்கப் பெறும் நிலை வாய்க்கிறது.

❖ புலன்கள் பூரணமாக அடங்கினால், ஒவ்வொரு தசையும்,நரம்பும் அடங்கும். ஏனென்றால் எல்லா உணர்ச்சிகளுக்கும் எல்லா செயல்களுக்கும் இந்திரியங்கள் மையங்களாக உள்ளன.இந்த இந்திரியங்கள் கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் என இரு வகைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 04




யன் ரஷ்யர்களை இழந்தது. அதாவது 1991 மற்றும் 2001 இற்கு இடைப்பட்ட 10 வருட காலப்பகுதியில் உக்ரைனின் மக்கள்தொகையில் 22% இற்கும் அதிகமாக இருந்த ரஷ்ய இனத்தவர்களின் எண்ணிக்கை 17% இற்கும் குறைந்துள்ளது.

2001 முதல் கடந்த 15 ஆண்டுகளில், ரஷ்ய இனத்தவர்களின் எண்ணிக்கையில் மேலும் வீழ்ச்சியைத் தொடர்ந்தது. இவ் வீழ்ச்சிக்கு பல காரணிகள் உள்ளன. பெரும்பாலான ரஷ்யர்கள் சோவியத் ஒன்றிய காலங்களில் நகர்ப்புற மையங்களில் வாழ்ந்தனர். இவர்கள் 1990 களின் பொருளாதார நெருக்கடிகளால் கடுமையாக பாதிக்கப்பட்டனர். சிலர் உக்ரைனிலிருந்து (பெரும்பாலும்) ரஷ்யாவிற்கு அல்லது மேற்கு நாடுகளுக்கு குடிபெயர்வதைத் தேர்ந்தெடுத்தனர்.

மேலும் சோவியத் ஒன்றியக் காலத்தில் ரஷ்யர்களாக எண்ணப்பட்டவர்களில் சிலர் மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது தங்களை உக்ரைனியராக அறிவித்துக் கொண்டனர். உக்ரைனின் அனைத்து மக்களையும் பாதித்த குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் அதிக இறப்பு விகிதம் போன்ற காரணிகளால் ரஷ்ய இனத்தவர்களும் பாதிக்கப்பட்டனர்.

உக்ரைனின் ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள மக்கள் தொகையில் ரஷ்ய இன மக்களின்தொகையை (2001) அட்டவணை- அ காட்டுகிறது.

2001 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, உக்ரைனில் உள்ள 95.9% ரஷ்யர்கள் ரஷ்ய மொழியைத் தங்கள் சொந்த மொழியாகக் கருதுகின்றனர். 3.9% பேர் உக்ரைனிய மொழியைத் தங்கள் சொந்த மொழியாகக் கருதுகின்றனர். பெரும்பான்மையான, 59.6% உக்ரைனிய ரஷ்யர்கள் உக்ரைனில் பிறந்தவர்கள். அவர்கள் நாட்டின் மொத்த நகர்ப்புற மக்கள் தொகையில் 22.4% மற்றும் கிராமப்புற மக்கள் தொகையில் 6.9% உள்ளனர்.

2001 கணக்கெடுப்பின்படி ரஷ்யர்களில் பெண்கள் 55.1%, ஆண்கள் 44.9%. உக்ரைனில் உள்ள ரஷ்யர்களின் சராசரி வயது 41.9 ஆண்டுகள். பாலியல் மற்றும் வயது கட்டமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வு மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் கூடுதலாக உள்ளது. ரஷ்யர்கள் தொழில்துறை மையங்களில் குறிப்பாக மாநில நகர மையங்களில் அதிகமாக உள்ளனர்.

ஜனவரி 1, 2010 ஆம் நாளிலிருந்து, நீதிமன்றங்களில் ரஷ்ய மொழியில் வழக்காடலாம் என்று அரசாணை தெரிவித்துள்ளது. உக்ரைனிய மொழியிலோ, ரஷ்ய மொழியிலோ பேசத்தெரியாதவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே பேசலாம் அல்லது மொழிபெயர்ப்பாளரின் உதவியை நாடலாம் என்று தெரிவித்துள்ளது.

சிறுபான்மை மொழிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் செயற்படுத்தினாலும், உக்ரைன் ஐந்து ஆண்டுகள் கழித்தே இச்சட்டத்தை நிறைவேற்றியது. ரஷ்ய மொழியை ஆட்சி மொழியாக்க சட்டங்கள் இயற்றப்படும் என்று கூறியே தேர்தல்களில் வெற்றி பெறுகிறார்கள் அரசியல்வாதிகள். 2006 ஆம் ஆண்டில் கார்கீவ் நகரம் ரஷ்ய மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டது. இதைத் தொடர்ந்து பல தெற்கு, கிழக்கு மாநிலங்கள் ரஷ்ய மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டன.

ஒகஸ்ட் 2012 இல் இயற்றப்பட்ட சட்டத்தில், ஒரு பகுதியில் குறைந்தது 10 விழுக்காட்டினர் பேசும் மொழி அப்பகுதியின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இதன்படி தெற்கு, கிழக்கு மாநிலங்களின் பல பகுதிகளில் ரஷ்ய மொழி உள்ளூர் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது.

**ஒகஸ்ட் 2012 இல் இயற்றப்பட்ட சட்டத்தில், ஒரு பகுதியில் குறைந்தது 10 விழுக்காட்டினர்பேசும்மொழி அப்பகுதியின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இதன்படி தெற்கு, கிழக்கு மாநிலங்களின் பல பகுதிகளில் ரஷ்ய மொழி உள்ளூர் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது.**

### உக்ரைனின் மக்கள்தொகையில் ரஷ்யர்கள்

பொதுவாக உக்ரைனில் 1897 இற்கும் 1939 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பஞ்சம், போர் மற்றும் புரட்சி இருந்த போதிலும் ஒருங்கிணைத்தல் மற்றும் இடம்பெயர்வு காரணமாக ரஷ்ய இனத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஆனால் 1991 முதல் இது மாறியது. 1991 இற்குப் பின் அனைத்துப் பகுதிகளிலும், ரஷ்ய இனத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் விகிதாசாரத்தில் வெகுவாகக் குறைந்தது. இக் காலத்தில் உக்ரைன் பொதுவாக 3 மில்லி



உக்ரைன் மற்றும் ரஷ்ய மொழி பேசும் பிரதேசங்கள்

அட்டவணை- அ
உக்ரைனின் ஒவ்வொரு மாநிலங்களிலும் உள்ள மக்கள் தொகையில் ரஷ்ய இன மக்கள் -2001

| மேற்கு உக்ரைன் மாநிலங்கள் | ரஷ்ய இன மக்கள் | % | மத்திய உக்ரைன் மாநிலங்கள் | ரஷ்ய இன மக்கள் | % |
|---|---|---|---|---|---|
| வாலின் | 25,100 | 2.4 | சைதோமிர் | 68,900 | 5.0 |
| ரைவன் | 30,100 | 2.6 | கீவ் | 109,300 | 6.0 |
| க்மெள்னிட்சிகி | 50,700 | 3.6 | செர்னிஹிவ் | 62,200 | 5.0 |
| தெர்னாபில் | 14,200 | 1.2 | சுமி | 121,700 | 9.4 |
| லிவிவ் | 92,600 | 3.6 | போல்தாவா | 117,100 | 7.2 |
| சாகர்பாசியா | 31,000 | 2.5 | செர்கசி | 75,600 | 5.4 |
| ஐவனோ-பிரான்கிவிஸ்க் | 24,900 | 1.8 | வின்னிதிசியா | 67,500 | 3.8 |
| செர்னியிவ் | 37,900 | 4.1 | கீரோவராத் | 83,900 | 7.5 |
| கிழக்கு உக்ரைன் மாநிலங்கள் | | | தெற்கு உக்ரைன் மாநிலங்கள் | | |
| கார்கிவ் | 742,000 | 25.6 | தினிபிராபிட்ரோவஸ்க் | 627,500 | 17.6 |
| லுகன்ஸ்க் | 991,800 | 39.0 | ஒடேசா | 508,500 | 20.7 |
| தோனெஸ்க் | 1,844,400 | 38.2 | மைகோலைவ் | 177,500 | 14.1 |
| கிரிமியா குடியரசு | 1,180,400 | 58.3 | கேர்சன் | 165,200 | 14.1 |
| கீவ் நகரம் | 337,300 | 13.1 | ஸாபோரிசியா | 476,800 | 24.7 |
| செவாஸ்டோபோல் நகரம் | 270,000 | 71.6 | | | |

### உக்ரைனிய நிர்வாகப் பிரிவுகள்

உக்ரைனின் நிர்வாகப் பிரிவுகள் உக்ரைனிய அரசியலமைப்பின் அதிகார வரம்பிற்குட்பட்ட உக்ரைனின் புவியியல் பகுதிகளுக்குள் துணை தேசிய நிர்வாகப் பிரிவுகளாகும். துணைப்பிரிவின் முதல் நிலை 27 பிரிவுகளை/பகுதிகளைக் கொண்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ...

முடியாததாலேயே அவர் பதவி விலகுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவராக விஜித ஹேரத் கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பதவியேற்றார்.

இதற்கு முன்னர் அவர் இலங்கை மின்சார சபையின் தலைவராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7)

## இரு சகோதரர்...

தந்தை ஆகியோர் வெட்டுக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளத்தில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் உயிலங்குளம், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த யேசுதாசன் றோமியோ (வயது-40), யேசுதாசன் தேவதாஸ் (வயது - 35) என்ற இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

கடந்த வாரம் மாட்டு வண்டிச் சவாரியில் ஏற்பட்ட தகராறை அடுத்தே நால்வர் மீதும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,285)

## குளவி கொட்டிய...

வெள்ளிக்கிழமை மாணவர்கள் ஆசிரியர்கள் இருந்தவேளை குளவிக்கூட்டில் இருந்து கலைந்த குளவிகள் மாணவர்கள், ஆசிரியர்களை கொட்டியுள்ளது. (ம-7,33,60)

## எதிர்வரும்...

களைக் கருத்திற் கொண்டு இந்த விசேட அரச விடுமுறை தினம் வழங்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள் விவகார அமைச்சின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கு இடையூறாக இருக்கக் கூடாது எனவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

பொசன் பௌர்ணமி தினமான ஜூன் 14 ஆம் திகதி ஏற்கனவே அரசாங்க விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## புதையல்...

கம் புதைக்கப்பட்டிருப்பதாக தோண்ட முற்பட்ட 7 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வீட்டின் வளாகத்தில் பல கோடி ரூபாய் பெறுமதியான தங்கத் தகடு புதைத்து வைத்துள்ளதாகத் தெரிவித்து அதனை தோண்டி எடுக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, மகரகம, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 6 சந்தேக நபர்களும் புதையல் தோண்டும் பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

## பொன்னாலை...

மடைந்துள்ளனர்.

சம்பவத்தில் பொன்னாலையை சேர்ந்த கி.பூபாலரத்தினம் (வயது-57), பகிரதன் (வயது -41) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## பல்கலை...

பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படாமையை சுட்டிக்காட்டியும் மற்றும் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் உணவுகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டமையை கண்டித்தும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வி அமைச்சின் வளாகத்திற்குள் பலவந்தமாக நுழைய முற்பட்ட போது பொலிஸார் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டனர். (ம-7)

## பாரிய மனிதா...

இது முழுமையான மனிதாபிமான அவசரநிலையாக மாறலாம் என நாங்கள் கவலைகொண்டுள்ளோம். இதற்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கை எடுத்துள்ளோம் என ஐநாவின் மனிதாபிமான

முகவர் அமைப்பான ஓசிஎச்ஏயின் பேச்சாளர் ஜென்ஸ் லார்கே நேற்றுத் தெரிவித்துள்ளார்.

பெருமளவு மக்கள் தற்போது போதிய உணவு இல்லாத நிலையில் உள்ளனர் என தெரிவித்துள்ள அவர் குடும்பங்கள் மருத்துவசேவைகள் பாதுகாப்பு மற்றும் சிறுவர் கல்வியைப் பெறுவதும் கேள்விக் குறியாகியுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-7)

## புத்தரின் சிலை...

குமுளமுனை தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இராணுவத்தினரின் பூரண ஒத்துழைப்போடு அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரையில் கபோக் கல்லினால் செதுக்கப்பட்ட புத்தர் சிலை ஒன்றை பிரதிஷ்டை செய்யும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்று முழுதாக இராணுவத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள், முப்படையினர், பொலிஸ் உயர் அதிகாரிகள், பௌத்த பிக்குகள், பெருமளவான தென் பகுதியை சேர்ந்த பெரும்பான்மை இன மக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றில் குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுவரும் பௌத்த விகாரை நீதிமன்ற கட்டளைக்கு மாறாக அமைக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு இடைக்கால தடைகோரியும் தமிழ் மக்களுக்கு குருந்தூர் மலையில் உள்ள வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரனால் உச்ச நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் இதுவரை இடைக்கால தடையுத்தரவு பெறப்படவில்லைஎன்பதோடு தடையுத்தரவு ஒன்று கிடைப்பதற்கு முன்பதாக விரைவுபடுத்தி விகாரையை கட்டிமுடிக்கும்வகையில் இரவு பகலாக நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் சிவில் பாதுகாப்பு படையினர் சேர்ந்து இந்த விகாரையை அமைத்து நிறைவுறுத்தும் கட்டத்தில் இந்த புதிய புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யும் நிகழ்வும் நாளை இடம்பெறவுள்ளது. (ம-7)

## கிணற்...

வயதுடைய இளம் குடும்ப பெண்ணின் சடலம் ஒன்று நேற்று இரவு 7.45 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் கணவரும், இரு பிள்ளைகளும் லண்டனில் வசித்து வரும் நிலையில் கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் குறித்த பெண் லண்டனில் இருந்து வருகை தந்து வவுனியா, தோணிக்கல், ஆலடி வீதியில் வசித்து வந்த நிலையிலேயே அவரது சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த குறித்த பெண்ணை காணவில்லை என உறவினர்கள் தேடிய போது கிணற்றில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

அப்பகுதி இளைஞர்கள், பொது மக்களின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டதுடன், சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## யாழில் டெங்கு...

தைத் தொடர்ந்து மறுநாள் புதன்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பரிசோதனையில் இவருக்கு டெங்கு நோய் உறுதிப்படுத்தப்பட்டது. தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த இவர் சிகிச்சை பலனின்றி நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். இவரதுமரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,33,60)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 10/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1260
வெற்றி இலக்கங்கள்: சிம்மம் 4 8 9 3 1 6
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2022.06.10 | சீட்டிழுப்பு இலக்கம் 3024
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 36 51 58 59
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 10/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1130
T 01 | 05 24 49 78

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.10
சீட்டிழுப்பு இலக்கம் 091
விருச்சிகம் | 02 22 36 43 | விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2022/06/10
சீட்டிழுப்பு இலக்கம் 4782
Y 9 5 5 8 2 3
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி -2022.06.10
சீட்டிழுப்பு இலக்கம் - 812
X 19 53 54 74
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1583
சீட்டிழுப்பு திகதி : 2022.06.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,138,700/-
வெற்றி இலக்கங்கள் 12 20 60 72 | ஆங்கில எழுத்து A

### சனிதா

வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.10
சீட்டிழுப்பு இல : 3918
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,014,500/-
வெற்றி இலக்கங்கள் 13 14 31 40 | ஆங்கில எழுத்து P

### சசிரி

சீட்டிழுப்பு 181
சீட்டிழுப்பு 2022.06.10
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 12 14
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,651,160/-

### ராஜ

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,470,517.20
திகதி 2022-06-10
வெற்றி வாரம் 3469
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 10 25 27 38 | மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,005,780/-

### 12 அப்பா (Lagna Wasana)

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 36 12 38 60 65
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 933
திகதி 2022.06.10 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 241,541,173/-

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1757 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.06.10 | தினம் வெள்ளிக்கிழமை
T 47 54 66 69
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,323,620/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக்காரர்கள் கையில் இரத்தக் கறை - மகிந்த

(கொழும்பு)

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொலையில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மதத்தலைவர்களால்கூட மே 9ஆம் திகதி வன்முறையை தடுக்க முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தை அமைதியான போராட்டம் என கருதமுடியாது என அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கரங்களில் குருதி படிந்துள்ளது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)


UK STUDENT VISA
IELTS தேவையில்லை (நிபந்தனைக்குட்பட்டது)
DEGREE முடித்தவர்களுக்கு 1 வருட MASTER DEGREE மற்றும் வேலைவாய்ப்புக்கள்
(C-4410)



CIMS COLLEGE 0777-068-777

Win Repair
குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்துவிட்டதா? கவலையை விடுங்கள். வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கின்றோம். (11833)
077 964 8942

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )
- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் போட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை
(11791)
077 814 7389, 077 241 7589 - ஜெயம்

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-4410)
V2 TRAVELS
எமது கிளைகள்
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

பண்டிதர் கலாநிதி சி. திருநாவுக்கரசு (PhD) அவர்களின்
தமிழ் இலக்கியத் தொகுப்பு 10 - 11
தமிழ் - 13 ஆம் ஆண்டிற்குரியது
கிடைக்குமிடம்
அகஸ்ஹாரா விற்பனை நிலையம்
பிள்ளையார் அச்சகம், நல்லூர்.
(11800) - 077 390 1877

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நாவற்குழி சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 12 பரப்புக் காணி விற்பனைக்கு.
நிலப்பரப்பு
★ 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் A9 வீதி முகப்புடன் வாகனங்கள் தரித்து நிற்பதற்குரிய பாரிய இடவசதி வீதியுடன் அமைந்துள்ளது.
★ வியாபார நிலையங்கள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த நல்ல தண்ணீர் மேட்டுக்காணி.
★ நாவற்குழி சந்தியிலிருந்து கைதடி செல்லும் வீதி முகப்புடன் லங்கா அசோக் லேடன் வாகன காட்சியறை நேரெதிரே அமைந்துள்ளது.
பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை
(11824)
077 623 4204, 077 288 0152

85 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
Dr. வேலுப்பிள்ளை தேவராசன் (D.A.M)
11.06.2022



எண்ணங்கள் நல்லதாயின்
வண்ணமாகும் வாழ்வு!
எனும் அருமை மிகு வார்த்தைக்கு
அர்த்தமானீர்; அவ்வாறே வாழ்ந்தீர்!
வற்றாப்பளை கண்ணகியை
அனுதினம் துதித்து
உண்மை - நேர்மை - நிதானம்
மூன்றையும் மூச்சாய் கொண்டீர்
இந்நநாள் இனிய நல்லநாள்
85 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
அன்புடன் வாழ்த்தும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள்
இல. 27, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.
077 047 0609

EXPOSURE VISIT (15,16,17- 06 - 2022)
(ஹெரலியவல கைத்தொழில் வலயம் - குருநாகல்)
நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர வியாபார மேம்படுத்தல்கள் தொடர்பான அனுபவ பகிர்வுகளை நோக்காக கொண்டு யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் (CCIY) BMO Partnership திட்டத்துடன் இணைந்து (தொழிற்துறை சேவை பணியகத்தின் வழிகாட்டலில் (ISB), Exposure visit ஒன்றை ஒழுங்குசெய்துள்ளது.
ஹெரலியவல கைத்தொழில் வலயத்தினுள் விஜயத்தினை மேற்கொண்டு உங்கள் தொழிற்துறைகளுக்கான அனுபவ பகிர்வுகளை பெற விரும்பும் தொழில்முனைவோர் முற்பதிவுகளை மேற்கொண்டு Exposure visit தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு : 070 366 3603
(C-4475)
No: 55,
Kachcheri Nallur Road, Jaffna.
+94 21 222 6608|9 / +9470366 3600 - 4
e-mail: info@cciy.lk | web: www.cciy.lk
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM CCIY UNITY IS STRENGTH
german cooperation | sequa | BMO

TECHNA Technical Institute
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2024
புதிய பிரிவு ஆரம்பம்
11.06.2022 சனிக்கிழமை
காலை 8.00 மணிக்கு
Engineering Technology, Bio Systems Technology, Science for Technology, Agricultural Science, ICT, Maths, Geography
அனுமதிகளை நேரடியாக பெற்றுக் கொள்ள முடியும்.
வீரசிங்கம் மண்டபம் 3ஆம் மாடி,
யாழ்ப்பாணம். 077 170 3549
(11748)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.